**தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் தருமபுரி**

**முன்னிலை :- R.முகமது ரிஸ்வானுல்லா ஷெரீப் B.Sc., B.L.,**

தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், தருமபுரி.

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 27 ம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவர் ஆண்டு 2057 ஸ்ரீவிசுவாவசு வருடம் பங்குனி மாதம் 13 ம் நாள்

CNR.No.TNDP 04 - 007793 - 2022

**ஆண்டு பட்டிகை எண்.388/2022**

**அரசுக்காக, காவல் ஆய்வாளர்,**

**அதியமான்கோட்டை காவல் நிலையம்**

**குற்ற எண்.64/2021 …… குற்றமுறையீட்டாளர்**

/எதிராக/

**மாதையன் (வயது 59)**

**த/பெ.வெங்கட்ராமன் ….. குற்றம் சாட்டப்பட்டவர்**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | அதியமான்கோட்டை காவல் நிலையம் குற்ற எண். 64/2021 |
| 2. | எதிரியின் பெயர் | மாதையன் |
| 3. | தந்தையின் பெயர் | வெங்கட்ராமன் |
| 4. | தொழில் | ஓட்டுநர் |
| 5. | குடியிருப்பு | செமிசெட்டிப்பட்டி கிராமம் & அஞ்சல், நல்லம்பள்ளி வட்டம், தருமபுரி. |
| 6. | வயது | 59/2021 |
| 7. | சம்பவம் | தேதி : 17.01.2021 |
| 8. | முறையீடு | தேதி : 17.01.2021 |
| 9. | கைது | தேதி : 18.01.2021 |

| | | |
|---|---|---|
| 10. | பிணையில் விடுதல் | தேதி : 18.01.2021 |
| 11. | ஒப்படைத்தல் /அனுப்பிவைத்தல் | இல்லை |
| 12. | விசாரணை துவக்கம் | தேதி : 27.10.2022 |
| 13. | விசாரணை முடிவு | தேதி : 11.03.2026 |
| 14. | தண்டனை அல்லது உத்தரவு | **முடிவாக**, இவ்வழக்கில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழான குற்றங்களை பொறுத்து எதிரி குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 255(1)-ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் சான்றுபொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. |
| 15. | தீர்ப்புரை நகலை வழங்குதல் அல்லது குற்றஞ்சாட்டப்பட்டவர் மீதான காண்முடிவு/முடிவு | நாள் : 27.03.2026 |
| 16. | காலதாமதத்தின் விளக்கம் | காலதாமதம் இல்லை |

கடந்த 05.08.2022 ம் தேதியன்று நீதித்துறை நடுவர் எண்.2 தருமபுரி C.C.No. 388/2022 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, பின்னர் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்ற D.No.1684/2025 நாள் 24.07.2025 ஆம் தேதிய உத்தரவுப்படி நீதித்துறை நடுவர் எண்.2 தருமபுரியிலிருந்து கடந்த 12.08.2025 ம் தேதியன்று வழக்கு கோப்பு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, கடந்த 26.08.2025 ம் தேதியன்று C.C.No.388/2022 ஆக தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு அரசு தரப்பில் கற்றறிந்த கூடுதல் அரசு வழக்கறிஞர் **திருமதி.R.தீபா** B.Sc., L.L.M., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த

வழக்கறிஞர் **திரு.K.G.காவேரிவர்மன், B.A., B.L.,** மற்றும் **திரு.S.திருநாவுக்கரசு, B.A.,B.L.,** அவர்கள் ஆஜராகியும் கடந்த 25.03.2026ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது இருதரப்பு வாதங்களும் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**தீர்ப்புரை**

அதியமான்கோட்டை காவல் நிலைய குற்ற எண்.64/2021-ல் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கையின் சுருக்கம் பின்வருமாறு -

1. கடந்த 17.01.2021ம் தேதி 16.20 மணிக்கு இலளிகம் - நல்லம்பள்ளி ரோடு நல்லம்பள்ளி அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள மணி மளிகை கடை அருகில் சீத்தாராமன் என்பவர் சைக்கிளில் இலளிகம் பக்கம் இருந்து நல்லம்பள்ளி நோக்கி சென்றுகொண்டிருந்தபோது அங்கு உள்ள மைதானம் அருகில் கூட்டமாக நிறைய நபர்கள் இருந்ததால் சீத்தாராமன் சைக்கிளை வலது புறம் திருப்பியபோது அவருக்கு பின்னால் இலளிகம் பக்கமிருந்து நல்லம்பள்ளியை நோக்கி வந்த TN 29 N 2382 என்ற பதிவு எண் கொண்ட 1-A அரசு பேருந்தின் ஓட்டுநரான மாதையன் என்பவர் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சீத்தாராமனின் சைக்கிள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியுள்ளார். சம்பவத்தில் சீத்தாராமன் சைக்கிள் மீது பேருந்து மோதியதில் சைக்கிள் இடது புறமாகவும், சீத்தாராமன் வலது புறமாகவும் கீழே விழுந்தபோது பேருந்தின் இடதுபுற பின் சக்கரத்தில் சீத்தாராமனின் தலை மாட்டி நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துயுள்ளார். எனவே, எதிரி மாதையன் மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் அதியமான்கோட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி மீது முகாந்திர வழக்கு இருந்ததால் இவ்வழக்கானது குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 தருமபுரி நீதிமன்றத்தால் இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த

வழக்கில் எதிரி ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு கு.வி.மு.ச.பிரிவு 207-ன் படி இலவசமாக வழங்கப்பட்டது.

3(i). குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, பின்னிட்டு இருதரப்பு வாதமும் கேட்டு, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரி மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழான குற்றங்களின் சாராம்சத்தை விளக்கி கூறி வினவியபோது, எதிரி குற்றங்களை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்திரவிடப்பட்டது.

3(ii). இந்நிலையில், நீதித்துறை நடுவர் எண்.2 தருமபுரியிலிருந்து கடந்த 12.08.2025 ம் தேதியன்று வழக்கு கோப்பு தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு, கடந்த 26.08.2025-ம் தேதியன்று C.C.No.388/2022 ஆக தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டது.

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சிகளில் உள்ள 4, 5, 6, 7, 10, 11, 12 மற்றும் 14 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பில் விசாரிக்காமல் நீக்குறவு செயப்பட்டுள்ளனர்.

5. **அரசு தரப்பு சாட்சிய சான்றவணங்களின்படி தெரியவரும் வழக்கு விவரம்** :-

5(i). இவ்வழக்கின் புகார்தாரரான விட்டோபதாஸ் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 விட்டோபதாஸ் இவ்வழக்கில் இறப்புற்ற சீத்தாராமனின் தம்பி ஆவார். கடந்த 17.01.2021 ம் தேதி மாலை சுமார் 04.00 மணிக்கு இறப்புற்ற சீத்தாராமன் அவரது சைக்கிளில் வீட்டில் இருந்து புறப்பட்டு நல்லம்பள்ளி

அரசு மேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள மணி என்பவரது மளிகை கடை அருகில் சென்றபோது மைதானம் அருகில் கூட்டமாக நிறைய நபர்கள் இருந்ததினால் சீத்தாராமன் ரோட்டில் கூட்டத்தை தாண்டி செல்வதற்காக ரோட்டின் வலது புறம் சைக்கிளை திருப்பியபோது இலளிகம் பக்கத்திலிருந்து நல்லம்பள்ளியை நோக்கி வந்த 1A TN 29 N 2382 என்ற டவுன் பேருந்து அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் சித்தாராமனுக்கு பின்னால் வந்து சைக்கிள் மீது மோதியதில் சைக்கிள் இடது புறமாகவும், சீத்தாராமன் வலது புறமாகவும் கீழே விழுந்ததில் பேருந்தின் இடதுபுற பின்சக்கரத்தில் சீத்தாராமனின் தலை மாட்டி நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார் என அ.சா.1 க்கு தகவல் கிடைத்து அ.சா.1 சம்பவ இடம் சென்று பார்த்தபோது சீத்தாராமன் தலைநசுங்கிய நிலையில் சம்பவ இடத்திலேயே இறந்துகிடந்தவரை ஆம்புலன்ஸில் ஏற்றி தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துள்ளார்கள். சீத்தாராமனுக்கு இறப்பை ஏற்படுத்திய அரசு பேருந்து ஓட்டுநர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி அ.சா.1 விட்டோபதாஸ் 17.01.2021 ம் தேதி அதியமான்கோட்டை காவல் நிலையம் ஆஜராகி நிலைய பொறுப்பில் இருந்த காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 திரு.மூர்த்தி அவர்களிடம் **அ.சா.ஆ.1** புகார்மனு கொடுத்துள்ளார்.

5(ii). அ.சா.1 கொடுத்த புகார்மனுவை பெற்ற காவல் உதவி ஆய்வாளர் அ.சா.6 திரு.மூர்த்தி புகார்மனுவிற்கு ஏற்ப நிலைய குற்ற எண்.64/2021 இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் **அ.சா.ஆ.3** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதியமான்கோட்டை காவல் ஆய்வாளர் விடுப்பில் இருந்ததால் புலன்விசாரணைக்காக வழக்கு கோப்பை அன்றைய தினம் பொறுப்பு பணியில் இருந்த மதிகோன்பாளையம் காவல் ஆய்வாளர் திரு.அம்மாதுரை அவர்களரிடம் ஒப்படைத்துள்ளார்.

5(iii ). புலன்விசாரணை அதிகாரியான மதிகோன்பாளையம் காவல் ஆய்வாளர் திரு.அம்மாதுரை அவர்கள் கடந்த 17.01.2021ம் தேதி வழக்கை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்றைய தினம் 20.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் வின்செண்ட் மற்றும் கணேசன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு **அ.சா.ஆ.2** பார்வை மகஜர் மற்றும் **அ.சா.ஆ.4** மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகள் விட்டோபதாஸ், தியாகராஜன், மூர்த்தி, வின்செண்ட் மற்றும் கணேசன் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். கடந்த 18.01.2021ம் தேதியன்று தருமபுரி அரசு மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்திருந்த விபத்தில் இறப்புற்ற சீத்தாராமன் என்பவர் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு **அ.சா.ஆ.5** பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்துள்ளார்.

5(iv ). மேலும், புலன்விசாரணை அதிகாரி பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக காவலர் திரு.நரேந்திரன் மூலம் வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்துள்ளார். பின்பு சாட்சிகள் மாணிக்கரசு, ரவிச்சந்திரன், லதா மற்றும் இளங்கோ ஆகியோர்களை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இவ்வழக்கின் புகார்தாரரான அ.சா.1 விட்டோபதாஸ் என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அன்றைய தினம் 17.30 மணியளவில் காவல் நிலையம் முன்பு இவ்வழக்கின் எதிரி மாதையனை கைது செய்து தக்க பிணையில் விடுவித்துள்ளார். விபத்தை ஏற்படுத்திய TN 29 N 2382 என்ற பதிவு எண் கொண்ட 1-A அரசு பேருந்தை 20.01.2021ம் தேதி மோட்டார் வாகன ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிவைத்து வழக்கு கோப்பை தொடர் புலன்விசாரணைக்காக வைத்துள்ளார்.

5(v). மேலும், வழக்கை தொடர் புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட காவல் ஆய்வாளர் அ.சா.7 திரு.ரங்கசாமி அவர்கள் கடந்த 21.04.2021ம் தேதி வழக்கு கோப்பை பெற்றுக்கொண்டு முதற்கட்ட புலன்விசாரணையை உறுதிப்படுத்தி பின்பு சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு சாட்சிகளை விசாரித்தபோது முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரியிடம் சொன்ன சங்கதிகளையே அ.சா.7 டமும் சொன்னதால் மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தினை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மணிமாறன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.ஆ.6** மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றுள்ளார். சம்பவத்தில் இறந்துபோன சீத்தாராமன் என்பவரின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த தருமபுரி அரசு மருத்துவமனை மருத்துவர் திரு.செல்வராஜ் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து **அ.சா.ஆ.7** பிரேத பரிசோதனை சான்றை பெற்றுள்ளார். பின்பு பிரேத பரிசோதனை அலுவலர் புரிந்த காவலர் திரு.நரேந்திரன் மற்றும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த திரு.மூர்த்தி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதற்கட்ட புலன்விசாரணை அதிகாரியின் கையொப்பம் தனக்கு நன்கு பரிட்சையம் என்பதால் அவருக்கு பதிலாக அ.சா.7 காவல் ஆய்வாளர் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி மீதான குற்றம் உண்மையென தெரியவந்ததால் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் மற்றும் சான்றாவணங்களிலிருந்தும் குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு பாதகமாக அமைந்த சாட்சிய சூழ்நிலைகளை எதிரியிடம் கு.வி.மு.ச.பிரிவு 313(1) (ஆ)-ன் கீழ் வினவியபோது எதிரி மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என்று கூறினார். மேலும், எதிரி

தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

7. **<u>இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் :-</u>**

i) எதிரி மனித உயிருக்கு ஆபத்து உண்டாக்கும் விதமாக பொது பாதையில் அஜாக்கிரதையாகவோ அல்லது கவனக்குறைவாகவோ வாகனத்தை ஓட்டி சீத்தாராமன் இறப்பிற்கு காரணமாக இருந்துள்ளாரா?

ii) எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன்படி சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

8. அரசு தரப்பு வழக்கின்படி கடந்த 17.01.2021ம் தேதி 16.20 மணிக்கு இலளிகம் - நல்லம்பள்ளி ரோடு நல்லம்பள்ளி அரசுமேல்நிலைப்பள்ளி அருகில் உள்ள மணி மளிகை கடை அருகில் சீத்தாராமன் என்பவர் சைக்கிளில் இலளிகம் பக்கம் இருந்து நல்லம்பள்ளி நோக்கி சென்றுகொண்டிருந்தபோது அங்கு உள்ள மைதானம் அருகில் கூட்டமாக நிறைய நபர்கள் இருந்ததால் சீத்தாராமன் சைக்கிளை வலது புறம் திருப்பியபோது அவருக்கு பின்னால் இலளிகம் பக்கமிருந்து நல்லம்பள்ளியை நோக்கி வந்த TN 29 N 2382 என்ற பதிவு எண் கொண்ட 1-A அரசு பேருந்தின் ஓட்டுநரான மாதையன் என்பவர் பேருந்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து சீத்தாராமனின் சைக்கிள் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் பேருந்தின் இடதுபுற பின் சக்கரத்தில் சீத்தாராமனின் தலை மாட்டி நசுங்கி சம்பவ இடத்திலேயே சீத்தாராமனுக்கு இறப்பை ஏற்படுத்தியுள்ளார். எனவே, எதிரி மாதையன் மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழ் அதியமான்கோட்டை காவல் நிலைய காவல் ஆய்வாளர் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

9. அரசு தரப்பில் வாதிட்ட கற்றறிந்த அரசு வழக்கறிஞர் தனது வாதத்தில் அரசு தரப்பு சாட்சிகள் மூலம் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும், எனவே எதிரிக்கு தக்க தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

10. எதிரி தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், விபத்தை கண்ணுற்ற சாட்சியான அ.சா.2 விபத்து நடந்தபோது மைதானத்திற்கு வெளியே இருந்துள்ளார் என்றும், விபத்து நடந்த இடத்திற்கும் அ.சா.2 இருந்த இடத்திற்கும் சுமார் 60 அடி தொலைவு இருக்கும் என்பதால், அ.சா.2 ஆல் விபத்தை நேரில் பார்க்க இயலாது என்றும், விபத்து நடந்த பிறகுதான் அவர் அங்கு சென்று பார்த்திருப்பார் என்றும், சைக்கிளில் சென்ற நபர்தான் பேருந்து வருவதை கவனிக்காமல் சைக்கிளை வலதுபுறம் திருப்பி விபத்தை தனக்குதானே ஏற்படுத்திக்கொண்டார் என்றும், அரசு பேருந்தின் ஓட்டுநர் சரியான திசையில் கவனமாகவும், மெதுவாகவும் பேருந்தை ஓட்டி சென்றுள்ளார் என்றும், இறந்தவர் தான் செல்லும் சாலையை விட்டு சற்று விலகி சென்றதால் விபத்து ஏற்பட்டது என்பது அ.சா.2 ன் சாட்சியத்தின் மூலம் தெரியவருவதாலும், இவ்விபத்திற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், எதிரியை இவ்வழக்கிலிருந்து விடுதலை செய்ய வேண்டுமென வாதிட்டார்.

11. அரசு தரப்பில் காவல் ஆய்வாளர் திரு.ரங்கசாமி அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.7 காவல் ஆய்வாளர் தாக்கல் செய்த இறப்புற்ற சீத்தாராமன் பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தில் இறப்புற்ற சீத்தாராமனின் பிரேத பரிசோதனை சான்று மற்றும் விபத்திற்குட்பட்ட TN 29 N 2382 என்ற பதிவு எண் கொண்ட 1-A அரசு பேருந்தின் ஆய்வறிக்கை பொருத்து ஆட்சேபனை இல்லை என எதிரி தரப்பில்

தெரிவிக்கப்பட்டதால் அரசு தரப்பில் கு.வி.மு.ச.பிரிவு 294-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட குற்றபல்வகை மனு எண்.373/2026 அனுமதிக்கப்பட்டு பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.செல்வராஜ் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.மணிமாறன் ஆகியோர்கள் அரசு தரப்பில் விசாரிப்பதிலிருந்து நீக்குறவு செய்யப்பட்டு புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 ரங்கசாமி காவல் ஆய்வாளர் மூலம் அ.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை மற்றும் அ.சா.ஆ.7 பிரேத பரிசோதனை சான்று குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. மேற்குறிப்பிட்ட அ.சா.ஆ.7 பிரேத பரிசோதனை சான்றினை பரிசீலனை செய்கையில், பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் திரு.செல்வராஜ் இறப்புற்ற சீத்தாராமன் மீது (The deceased would appear to have died of haemorrhage and shock due to multiple injuries sustained as a result of run over by heavy vehicle) கனரக வாகனம் மோதியதால் ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களின் காரணமாக இரத்தப்போக்கு மற்றும் அதிர்ச்சியின் விளைவாக இறந்திருக்கக்கூடுமென என்று குறிப்பிட்டுள்ளது அ.சா.ஆ.7 பிரேத பரிசோதனை சான்றினை பரிசீலனை செய்கையில் புலனாகிறது. மேலும், புலன்விசாரணை அதிகாரி மூலம் குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.6 மோட்டார் வாகன ஆய்வறிக்கையை பரிசீலனை செய்கையில், (This accident was not due to any mechanical defect of the vehicles) பேருந்தில் எந்தவித இயந்திர கோளாரினால் விபத்து ஏற்படவில்லை என மோட்டார் வாகன ஆய்வாளர் வழங்கிய ஆய்வறிக்கையின் மூலம் புலனாகிறது. மேலும், எதிரி தரப்பிலும் மேற்படி அ.சா.ஆ.6 ஆய்வறிக்கை முரண்படுத்துமாறு எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை. ஆகையால், பேருந்து இயந்திரகோளாரினால் விபத்து ஏற்படவில்லை என்பது நிருபணமாகிறது.

13. இச்சூழ்நிலையில், எதிரியுடைய அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டதா என்பது குறித்து பரிசீலனை செய்ய வேண்டியது அவசியமாகிறது. இவ்வழக்கின் புகார்தாரரான விட்டோபதாஸ் அரசு தரப்பில் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.1 விட்டோபதாஸ் தனது நீதிமன்ற விசாரணையின்போது,

> "இவ்வழக்கு விபத்தில் இறந்த சீதாராமன் என் உடன்பிறந்த அண்ணன் ஆவார். கடந்த 17.01.2021 அன்று மாலை சுமார் 04.30 மணிக்கு, நான் நல்லம்பள்ளியில் உள்ள என் வீட்டில் இருந்தபோது, எனக்கு தெரிந்த மூர்த்தி என்பவர் போன் செய்து, நல்லம்பள்ளியில் உள்ள அரசு உயர் நிலை பள்ளி எதிரில், மணி என்பவரது டீ கடை முன்பு, சைக்கிளில் சென்ற என்னுடைய அண்ணன் மீது, சுமார் 10 நிமிடங்களுக்கு முன்பாக TN29-N-2382 என்ற பதிவெண் கொண்ட தடம் எண் 1A என்ற அரசுப் பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாகவும், அங்குள்ள மைதானத்தில் பொங்கல் பண்டிகை நடைபெற்றதால், கூட்டமாக இருந்ததாகவும், அதனால் என் அண்ணன் சீதாராமன் தனது சைக்கிளை வலது புறமாக தள்ளி சென்றபோது, இலளிகத்திலிருந்து அவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்தின் ஓட்டுநர் வேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாகவும், தகவல் சொல்ல நான் உடனே சம்பவ இடத்திற்கு பார்த்தபோது, எனது அண்ணன் தலை மீது பேருந்தின் சக்கரம் ஏறி அவருடைய தலை நசுங்கி சம்பவ இடத்திலேயே இறந்துகிடந்தார். அருகிலிருந்த சைக்கிளும் நசுங்கிய நிலையில் இருந்தது. சம்பவ இடத்திலிருந்து சுமார் 20 அடி தொலைவில் விபத்தை ஏற்படுத்திய பேருந்து நின்று இருந்தது. அதன் ஓட்டுநர் அப்போது அங்கு இல்லை. அதன் பின்னர் அண்ணனின் உடலை ஆம்புலன்ஸ் மூலம் தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். விபத்து குறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி காவல் நிலையத்தில் புகார் மனு அளித்தேன். என்னிடம் காட்டப்படும் அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது".

என சாட்சியம் அளித்துள்ளார்.

14. அ.சா.1ன் முதன்மை சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், அ.சா.1 விபத்தை கேள்விபட்டுதான் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றுள்ளார் என்பதும், விபத்து யாருடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்பது குறித்து அ.சா.1க்கு நேரடியாக தெரியாது என்பதால் அ.சா.1ன் சாட்சியம் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க உகந்ததல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

15. விபத்தை கண்ணுற்ற சாட்சியான மூர்த்தி அரசு தரப்பில் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.2 தனது முதன்மை சாட்சியத்தில்,

> “கடந்த 17.01.2021 அன்று பொங்கல் கரிநாள் தினத்தில், இலளிகத்திலிருந்து நல்லம்பள்ளி செல்லும் சாலையில் உள்ள மணி மளிகை கடை முன்பாக, ஆதிதிராவிடர் குடியிருப்பு பகுதியில் உள்ள மைதானத்தில் பொங்கல் விழா நடைபெற்றுகொண்டிருந்தபோது, எங்கள் ஊரைச்சேர்ந்த, எனக்கு நன்கு தெரிந்த நபரான அ.சா.1ன் அண்ணன் இலளிகத்திலிருந்து நல்லம்பள்ளி நோக்கி சைக்கிளில் வந்தபோது, கூட்டமாக இருந்ததால், சற்றே விலகி, சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் வந்த தடம் எண் 1A அரசு பேருந்தின் ஓட்டுநர் ஓட்டி வந்த அரசு பேருந்து மோதி, மாலை சுமார் 04.30 மணிக்கு விபத்து ஏற்பட்டது. விபத்தை பார்த்த நான், கூட்டம் கூடிவிட்டதால், விபத்தில் காயம்பட்டவரின் தம்பி அ.சா.1 விட்டோபதாசுக்கு நேரில் சென்று தகவல் சொன்னேன். விபத்து ஏற்பட்ட நபர் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். விபத்து நடந்த உடன் இறந்தவரின் குடும்பத்திற்கு தகவல் சொல்ல சம்பவ இடத்திலிருந்து உடனே நான் சென்றுவிட்டதால், விபத்தை ஏற்படுத்திய பேருந்தின் ஓட்டுநரை நான் அப்போது பார்க்கவில்லை”.

என சாட்சியம் அளித்துள்ளார்.

16. அ.சா.2-ன் முதன்மை சாட்சியத்தை பரிசீலனை செய்கையில், விபத்தின்போது மைதானத்தில் பொங்கல் விழா நடைபெற்றதாகவும், கூட்டமாக இருந்ததால் இறந்த நபர் சற்றே விலகி சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது,

அவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்து மோதி விபத்து ஏற்பட்டதாக கூறியுள்ளார் என்பதும், மேலும் விபத்தானது எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் ஏற்பட்டது என்பது குறித்து அ.சா.2 தன் சாட்சியம் மூலம் தெளிவுப்படுத்தவில்லை என்பதும், மேலும், இறந்தவர் தான் செல்லும் சாலையை விட்டு சற்று விலகி சென்றதால் விபத்து ஏற்பட்டது என்பதும், விபத்தின்போது விபத்து ஏற்படுத்திய பேருந்து ஓட்டுநரை அ.சா.2 பார்க்கவில்லை என்பதும் அ.சா.2 ன் சாட்சியத்தின் மூலம் தெரியவருகிறது. மேலும், எதிரி தரப்பு குறுக்குவிசாரணையின்போது, சம்பவ இடம் சென்று பார்த்தேன் என்றால் விபத்து நடந்தவுடன் அங்கு சென்று பார்த்தேன் என கூறியுள்ளார். அ.சா.2 விபத்து சம்பவத்திற்கு பிறகுதான் அங்கு சென்றுள்ளார் என்பது தெரியவருதால் அவரது சாட்சியம் ஐயம் எழுவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. பார்வை மகஜர் சாட்சிகளான கணேசன் மற்றும் வின்செண்ட் அரசு தரப்பில் அ.சா4 மற்றும் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அ.சா4 மற்றும் அ.சா.5 தங்களது முதன்மை சாட்சியத்தில், விபத்து நடந்த இடத்திற்கு வந்த போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து தயாரித்த பார்வை மகஜிரில் கையொப்பம் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்கள். பார்வை மகஜர் சாட்சிகள் எதிரியை வழக்கு சம்பவத்துடன் தொடர்புப்படுத்தி சாட்சியம் அளிக்கவில்லை. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட தனிநபர் சாட்சிகள் எதிரி மீதான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில் பார்வை மகஜர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5-ன் சாட்சியங்கள் எதிரி மீதான குற்றத்தை நிரூபிக்க முக்கியத்துவம் பெறவில்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

18. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் திரு.மூர்த்தி அரசு தரப்பில் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அ.சா.6 தனது சாட்சியத்தில், விட்டோபதாஸ் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகார் மனுவினை பெற்று அதற்கேற்ப முதல் தகவல் அறிக்கை தயார் செய்து புலன்விசாரணைக்காக வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 காவல் ஆய்வாளர், தனது நீதிமன்ற விசாரணையின்போது, கடந்த 17.01.2021ம் தேதி காவல் ஆய்வாளர் திரு.அம்மாதுரை மேற்படி வழக்கை புலன்விசாரணைக்காக எடுத்துக்கொண்டு அன்றைய தினம் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்தும், பின்பு சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், மருத்துவமனை சவக்கிடங்கில் வைத்திருந்த இறந்துபோன சீத்தாராமன் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தது குறித்தும், பின்பு சடலத்தை பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் மூலம் மருத்துவருக்கு அனுப்பிவைத்தது குறித்தும், எதிரியை கைது செய்தது குறித்தும், பின்பு சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தது குறித்தும், விபத்து ஏற்படுத்திய பேருந்தை மோட்டார் வாகன ஆய்விற்கு வேண்டுகோள் கடிதம் மூலம் அனுப்பிவைத்தது குறித்தும், திரு.அம்மாதுரை காவல் ஆய்வாளர் முதற்கட்ட புலன்விசாரணையை முடித்து தொடர் புலன்விசாரணைக்காக வழக்கை கோப்பை ஒப்படைத்ததாகவும், தொடர் புலன்விசாரணை அதிகாரியான அ.சா.7 முதற்கட்ட புலன்விசாரணையை உறுதிபடுத்தி, பின்பு சாட்சிகளை விசாரித்து மறுவாக்குமூலம் செய்தது குறித்தும், ஆய்வறிக்கை வழங்கிய மோட்டார் வாகன ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு ஆய்வறிக்கை பெற்றது குறித்தும், பிரேத பரிசோதனை செய்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு பிரேத பரிசோதனை சான்று பெற்றது குறித்தும், காவலர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து புலன்விசாரணையை முடித்து எதிரி மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை ஒருங்கிணைத்து பார்க்கும்போது, அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.2 மூர்த்தி விபத்தை கண்ணுற்ற சாட்சி ஆவார். அ.சா.2 தனது சாட்சியத்தில் விபத்தில் இறந்தவர் சாலையிலிருந்து சற்று விலகி சென்றதால்தான் விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தின்போது விபத்து ஏற்படுத்திய பேருந்து ஒட்டுநரை தான் பார்க்கவில்லை என எதிரியை வழக்கு சம்பவத்துடன் தொடர்புப்படுத்தி சாட்சியம் அளிக்காததாலும், மேலும் எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் விபத்து ஏற்பட்டது என்பது குறித்து சாட்சியம் அளிக்காததால் அ.சா.2 ன் சாட்சியம் ஐயம் எழுகிறது. அ.சா.1 விபத்தை கேள்வியுற்ற சாட்சியாவார். அ.சா.1 க்கு யாருடைய கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டது என்பதை தீர்மானிக்க அ.சா.1-ன் சாட்சியம் ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் கருதுவதாலும், அலுவலக மற்றும் புலன்விசாரணை அதிகாரியின் சாட்சியங்களை மட்டும் வைத்துக்கொண்டு எதிரி மீதான குற்றச்சாட்டுகளை தீர்மானிக்க இயலாது என்பதாலும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அரசு தரப்பில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழாக சுமத்தப்பட்ட குற்றங்கள் தகுநிலை ஐயப்பாட்டிற்கு இடமற்ற வகையில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இவ்வழக்கில் மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

21. **முடிவாக,** இவ்வழக்கில் எதிரி மீது இ.த.ச.பிரிவுகள் 279, 304(A)-ன் கீழான குற்றங்கள் பொறுத்து எதிரி குற்றவாளி இல்லையென முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச.பிரிவு 255(1)-ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் சான்றுபொருள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து/தட்டச்சுருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிப்பொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026 ம் வருடம் மார்ச் மாதம் 27 ம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.03.27 12:10:33 +0530

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**
**தருமபுரி.**

**அரசு தரப்பு சாட்சிகள் :-**

| | | |
|---|---|---|
| அ.சா.1 | - | திரு.விட்டோபதாஸ் |
| அ.சா.2 | - | திரு.மூர்த்தி |
| அ.சா.3 | - | திரு.தியாகராஜன் |
| அ.சா.4 | - | திரு.கணேசன் |
| அ.சா.5 | - | திரு.வின்செண்ட் |
| அ.சா.6 | - | திரு.மூர்த்தி (காவல் உதவி ஆய்வாளர்) |
| அ.சா.7 | - | திரு.ரங்கசாமி (காவல் ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள் :-**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | - | புகார்மனு |
| அ.சா.ஆ.2 | - | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.3 | - | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | - | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.5 | - | பிரேத விசாரணை அறிக்கை |

அ.சா.ஆ.6 - TN 29 N 2382 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை

அ.சா.ஆ.7 - பிரேத பரிசோதனை சான்று

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : - **இல்லை**

**அரசு தரப்பு சான்று பொருட்கள்** : - **இல்லை**

MOHAMED RIZWANULLAH SHERIFF

Digitally signed by MOHAMED RIZWANULLAH SHERIFF
Date: 2026.03.27 12:10:40 +0530

**தலைமைக் குற்றவியல் நடுவர்,**
**தருமபுரி.**

========================

வரைவு/சீரான தீர்ப்புரை

ஆண்டு பட்டிகை எண்.388/2022

நாள் - 27.03.2026